# யா/யூனியன் கல்லூரி

# சைவநெறி

## 01. தாயுமானவர் கதை

1. மூதாட்டி செய்த இறை தொண்டு யாது?
   ॐ இறைவனுக்கு பூமாலை கட்டிக் கொடுக்கும் திருத்தொண்டினைச் செய்தார்

2. சுவாமி தரிசனம் முடித்துத் திரும்பிய மூதாட்டி, வீடு செல்ல முடியாமைக்குரிய காரணம் யாது?
   ॐ காவிரியாறு பெருக்கெடுத்து ஓடியமை

3. திருச்சிராப்பள்ளிக் குன்றுடையானுக்குத் தாயுமானசுவாமி எனப் பெயர் வரக் காரணம் யாது?
   ॐ இறைவன் எம்மைத்தாய் போன்று காப்பவர் என்பதனாலாகும்.

4. மூதாட்டி செய்யவதறியாது வேதனைப்பட்டு, தனக்கு உதவும்படி யாரிடம் வேண்டினார்?
   ॐ திருச்சிராப்பள்ளிக் குன்றுடையானிடம்

5. இக்கதையினுடாக நீங்கள் பெற்றுக் கொண்ட படிப்பினைகள் யாவை?
   ॐ கடவுளை நம்பினோர் கைவிடப்படார்
   ॐ கடவுள் உயிர்கள் அனைத்திற்கும் மேலானவர்
   ॐ கடவுள் ஒருவரே உண்மையானவர்,அவர் எமக்கு என்றும் துணையாக இருப்பார்

6. மூதாட்டி வாழ்ந்த இடம் எது?
   ॐ திருவானைக்கா

7. மூதாட்டியின் மகளின் பிரசவ காலத்தில் உதவி புரிந்தவர் யார்?
   ॐ இறைவன்

✠ தரப்பட்ட சொற்களை வைத்துக் கீறிட்ட இடங்களை நிரப்புக.

| |
|---|
| காவரி ஆறு, குன்றுடையான், தாயுமானவர் சுவாமி, மாறாத பக்தி, உயிர்கள் |

1. கடவுள் உயிர்கள் அனைத்திற்கும் மேலானவர்.
2. கடவுள் மீது எவர் மாறாத பக்தி கொள்கிறாரோ, அவருக்குத் துன்பம் வரும்போது வேண்டிய வடிவில் வந்து அருள் புரிவார்.
3. திருச்சிராப்பள்ளிக்கும், திருவானைக்காவிற்குமிடையே காவிரி ஆறு உள்ளது.
4. மூதாட்டி திருச்சிராப்பள்ளி குன்றுடையான் மீது பெரும்பக்தி கொண்டவர்.
5. திருச்சிராப்பள்ளிக் குன்றுடையானுக்கு தாயுமானவர் சுவாமி எனும் திருநாமம் வழங்கப்பட்டு வருகின்றது

## 02. பாடசாலையில் சைவம்

1. பாடசாலையில் கொண்டாடப்படும் சைவசமய விழாக்களைக் குறிப்பிடுக
   - ௐ நவராத்திரி
   - ௐ நால்வர் குருபூசை
   - ௐ சமயப் பெரியார் குருபூசை

2. பாடசாலையில் சைவசமயத்தினை வளர்க்கும் முகமாகத் தினந்தோறும் நிகழ்த்தப்படும் நிகழ்வுகள் 2 தருக.
   - ௐ திருமுறை ஓதுதல்
   - ௐ மாணவர்களாலும், ஆசிரியர்களாலும் ஆற்றப்படும் நற்சிந்தனை

3. 'திருச்சிற்றம்பலம்' சொல்லப்படும் சந்தர்ப்பங்களைத் தருக.
   - ௐ திருமுறைகளை ஓதப்படுவதற்கு முன்பும், ஓதியதற்குப் பின்பும்

4. பாடசாலையில் கலைவிழாக்களைக் கொண்டாடுவதனால் மாணவர்கள் அடையும் நன்மைகள் எவை?
   - ௐ சமயப் பாரம்பரியங்களையும், விழுமியங்களையும் மாணவர்களிடையே விருத்தி பெறல்
   - ௐ பூமாலை கட்டுதல், கோலமிடுதல், பேச்சு, நாடகம், நடனம், கட்டுரை, பாவோதல் போன்றவற்றில் திறமை வளர்க்கப்படல்.

5. திருமுறைகளை ஓத முன்பும் ஓதிய பின்பும் திருச்சிற்றம்பலம் சொல்வதற்கான காரணம் யாது?
   - ௐ தில்லைச் சிற்றம்பலத்தில் தேவாரத்திருவேடுகள் கிடைக்கப்பெற்றமையை உணர்த்தும் முகமாக அவ்வாறு சொல்லப்படுகின்றது.

6. பஞ்ச புராணங்கள் எவை?
   - ௐ தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம்

## 03. பாடசாலையில் ஒழுக்கம்

1. பாடசாலை ஆரம்பமானவுடன் நடைபெறும் முக்கிய நிகழ்வுகள் இரண்டினைத் தருக?
   - ௐ கூட்டுப் பிராத்தனை இடம்பெறும்
   - ௐ ஒன்று கூடலில் நற்சிந்தனை வழங்கப்படல்

2. பாடசாலை நிறைவுறும் வேளையில் மாணவர் பின்பற்ற வேண்டிய ஒழுக்கங்கள் யாவை?
   - ௐ அமைதியாக எழுந்து நிற்றல்
   - ௐ திருமுறைகளை ஓதுதல்
   - ௐ வரிசையாக வகுப்பறையிலுருந்து வெளியே செல்லல்

3. மாணவர்கள் பாடசாலையில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்களைப் பட்டியற்படுத்துக
   - ௐ அன்பு, பணிவு, பண்பு, அமைதி, பக்திசிரத்தை, நல்லொழுக்கம்

4. பாடசாலையில் மதிப்பளிக்க வேண்டிய நபர்கள் யாவர்?
   - ௐ அதிபர்
   - ௐ ஆசிரியர்கள்
   - ௐ சக மாணவர்கள்
   - ௐ ஊழியர்கள்

5. மாணவர்களுக்கு ஒழுக்கங்களைப் போதிக்கும் நிலையமாக விளங்குவது எது?
   - ௐ பாடசாலை

6. மாணவர்கள் வகுப்பறையில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்?
   - ௐ ஆசிரியர் வகுப்பறைக்குள் வரும்போதும் போகும் போதும் எழுந்து நின்று வணக்கம் சொல்ல வேண்டும்.
   - ௐ ஆசிரியர் கற்பிப்பவற்றை அவதானமாக செவிமடுக்க வேண்டும்
   - ௐ சந்தேகங்கள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் ஆசிரியர் கற்பிப்பதற்கு இடையூறு ஏற்படுத்தாமல் தங்கள் முறை வரும் வரை காத்திருந்து எழுந்து நின்று ஐயங்களைத் தீர்க்க வேண்டும்.

## 04. வாழ்வியற் நற்பண்புகள்

அ. பணிவு

1. நாம் கடைப்பிடிக்க வேண்டிய வாழ்வியல் பண்புகள் சிலவற்றைத் தருக
   - ௐ பணிவு
   - ௐ நன்றி மறவாமை
   - ௐ நீதி
   - ௐ பொறுமை
   - ௐ சகோதரத்துவம்
   - ௐ பஞ்சமா பாதகங்களைத் தவிர்த்தல்

2. பணிவு பற்றித் திருவள்ளுவர் கூறும் குறள் ஒன்றினை எழுதுக.
   ௐ ''பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
   அணியுமாம் தன்னை வியந்து''

3. முனிவரின் ஆச்சிரமத்தில் அரசன் மனம் வருந்தியமைக்கான காரணம் யாது?
   ௐ நாட்டை ஆள வேண்டிய தன் மகன் விறகு சுமந்தமையைப் பார்த்து

4. அரசன் ஆச்சிரமத்தில் தங்கியிருந்த பொழுது முனிவரால் இராஜகுமாரனுக்கு இடப்பட்ட கட்டளைகள் யாவை?
   ௐ ''நம் ஆச்சிரமத்திற்கு முக்கிய விருந்தாளி வந்துள்ளார். அவருடைய இடத்தைச் சுத்தம் செய், வாசல் தெளி, கோலம் இடு என்றார்''

ஆ. நன்றி மறவாமை

1. நன்றி மறவாமை எனும் பண்பினை உணர்த்தும் திருக்குறள் ஒன்றினை எழுதுக.
   ௐ ''எந் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
   செய் நன்றி கொன்ற மகற்கு''

2. நன்றி மறவாப் பண்பிற்கு எடுத்துக்காட்டாக விளங்கிய இருவர் பெயர்களைத் தருக.
   - ௐ கர்ணன்
   - ௐ கும்ப கர்ணன்

இ. நீதி, நேர்மை

1. மாலும் அயனும் காணாத நீதியாக விளங்குபவர் யார்?
   ௐ சிவபெருமான்

2. நாம் நீதிநெறியில் வாழ்வதன் மூலம் எதனைப் பெறலாம்?
   ௐ இறையருளைப் பெறலாம்

3. மனுநீதி கண்ட சோழன் என்ற பெயருடைய மன்னன் யார்?
   ௐ சோழவள நாட்டை ஆண்ட அநபாயச் சோழன்

4. அரசிளங்குமாரனின் பெயர் யாது?
   ௐ வீதி விடங்கன்

5. கந்தபுராணத்தின் ஆசிரியர் யார்?
   ௐ கச்சியப்ப சிவாச்சாரியார்

ஈ. பொறுமை

1. பொறுமையைக் கடைப்பிடிப்பதால் ஏற்படும் இரு நன்மைகளைத் தருக
   ॐ வெற்றியைப் பெறலாம்
   ॐ உயர்ந்த வாழ்வைப் பெறலாம்

2. பொறுமையுடன் வாழ்ந்த அருளாளர்கள் இருவரைக் குறிப்பிடுக
   ॐ திருஞான சம்பந்தர்
   ॐ திருநாவுக்கரசர்

3. இப் பாடத்தில் வருகின்ற புனித நதியின் பெயர் யாது?
   ॐ கோதாவரி

4. ஏகநாதருக்கு தீங்கு செய்வதன் உள்ளம் திருந்தக் காரணம் யாது?
   ॐ எச்சிலை அவர் மீது உமிழ்ந்தும் அவர் சினங்கொள்ளவில்லை

5. ஏகநாதரின் குணப்பண்பு யாது?
   ॐ பொறுமை

உ. சகோதரத்துவம்

ஊ. பஞ்சமா பாதங்களைத் தவிர்த்தல்

1. சகோதரத்துவம் எனும் பண்பினை எடுத்துக்காட்டும் கதாபாத்திரங்களின் பெயர்களைக் கூறுக.
   ॐ இராமன்
   ॐ குகன்
   ॐ சுக்ரீவன்

2. பஞ்சமாபாதகங்கள் எவை?
   ॐ கொலை
   ॐ களவு
   ॐ கள் உண்ணல்
   ॐ பொய்
   ॐ காமம்

3. பஞ்சமா பாதகங்களைச் செய்வதன் மூலம் ஏற்படும் தீமைகள் யாவை?
   ॐ பிறவிகள் தோறும் தீய பயன்களை அனுபவிக்க நேரிடும்

4. கடவுள் மீது பக்தி கொண்டோர் அடையும் நன்மை யாது?
   ॐ தீவினைகளைத் தவிர்க்கும் ஆற்றலைப் பெறுகின்றனர்

5. வாழ்வில் எதிர்கொள்ளும் துன்பங்களைத் தவிர்க்க நாம் எவ்வாறு வாழ்தல் வேண்டும்?
   ॐ ஒவ்வொருவரும் அறநெறி நின்று ஒழுக்க சீலர்களாக சமுதாயத்தில் வாழ்தல் மூலமே வாழ்வில் எதிர் கொள்ளும் துன்பங்களைத் தவிர்க்க முடியும்.

6. நாம் எவ்வாறு வாழ்தல் வேண்டும்?
   ॐ நாம் கடவுள் மீது பக்தி கொண்டோராக வாழ்தல் வேண்டும்

# 05. புதுமனை புகுதல்

1. புதுமனை புகுதல் என்றால் என்ன?
   ௐ மனையடி சாஸ்திரம் கூறும் விதிகளுக்கமைய வீடொன்றைக் கட்டி சுபநாளில், சுபமுகூர்த்தத்தில் குடிபுகும் மங்கள நிகழ்வே புதுமனை புகுதல் ஆகும்

2. புதுமனை புகுதல் என்பதனை வேறு எவ்வாறு அழைப்பர்?
   ௐ கிருஹப்பிரவேசம்

3. புதுமனை குடிபுகும் தினத்தன்று இடம்பெறும் நிகழ்வுகள் யாவை?
   ௐ கிருஹப்பிரவேச தினத்தன்று கோயிலில் பூஜை செய்யப்பட்ட சுவாமிப்படங்கள், நிறைகுடம், விளக்கு, நிறைநாழி, தாம்பூலத்தட்டு, தேங்காய், உப்பு, மஞ்சள், கற்கண்டு போன்ற மங்கலப் பொருட்களுடன் வீட்டினுள் நுழைவர். ஆதன் பின்னர் பால் காய்ச்சி பொங்கல் வைத்து சுவாமிப் படங்களுக்கு நிவேதனம் செய்து பூஜைவழிபாடுகள் நிகழ்த்துவர், இறைவனை வணங்கியதன் பின்னர் வீட்டுப் பெரியோர்களிடம் ஆசிர்வாதம் பெற்று இன்புறுவர். அன்றைய தினம் சுற்றத்தார், நண்பர்கள் உறவினர்களை அழைத்து விருந்துபசாரம் அளித்து தமது மகிழ்வைக் கொண்டாடுவர்.

4. கிருஹப் பிரவேசத்தின் போது கோமாதாவால் வரவேற்கப்படுவதன் நோக்கம் யாது?
   ௐ அஷ்ட ஐஸ்வர்யங்களும் கிட்டும் எனும் ஐதீகம் இருப்பதால்.

## 06. விரதங்களும் பண்டிகைகளும்

அ. விரதங்கள்

- ॐ நாள் விரதங்கள்
- ॐ மாத விரதங்கள்

1. விரதம் என்றால் என்ன?
   ॐ "மனம் பொறி வழிப்போகாது நிற்றப் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் கடவுளை விதிப் படி மெய்யன்போடு வழிபடுதல் விரதம் ஆகும்.

2. நட்சத்திரங்கள் எத்தனை?
   ॐ 27

3. வியாழபகவான் மக நட்சத்திரத்துடன் கூடிய கும்பராசிக்குச் செல்லும் புண்ணியகாலம் எவ்வாறு சிறப்பிக்கப்படுகிறது?
   ॐ மகாமகம்

4. தைப்பூச தினத்தில் மேற்கொள்ளப்படும் சுபமங்கள காரியங்கள் இரண்டு தருக
   ॐ ஏடுதொடங்குதல்
   ॐ சமய தீட்சை பெறுதல்
   ॐ பெண் குழந்தைகளுக்குக் காது குத்துதல்
   ॐ மூக்குக் குத்துதல்

5. வருணனைப் பீடித்த தோஷம் நீங்கிய நாள் எது?
   ॐ மாசிமகம்

6. வார விரதங்கள் சில தருக
   ॐ சோமவார விரதம்(திங்கள்)
   ॐ செவ்வாய்க் கிழமை விரதம்
   ॐ வெள்ளிக்கிழமை விரதம்
   ॐ சனிக்கிழமை விரதம்

7. திதி விரதங்கள் சில தருக
   ॐ சதுர்த்தி
   ॐ சங்கடஹர சதுர்த்தி
   ॐ சஷ்டி
   ॐ ஏகாதசி விரதம்

8. நட்சத்திரத்தை அடிப்படையாகக் கொண்ட விரதங்கள் எவை?
   ॐ தைப்பூசம்
   ॐ திருக்கார்த்திகை விரதம்
   ॐ மாசி மகம்
   ॐ வைகாசி விசாகம்
   ॐ பங்குனி உத்தரம்

9. ஆண்டுதோறும் சிறப்பாக அனுட்டிக்கப்படும் விரதங்கள் எவை?
   ॐ மகா சிவராத்திரி விரதம்
   ॐ நவராத்திரி விரதம்
   ॐ வரலட்சுமி விரதம்
   ॐ கேதாரகௌரி விரதம்

10. மனிதனது உடலையும், உள்ளத்தையும் ஒருங்குபடுத்தும் திருநாட்கள் எவ்வாறு அழைக்கப்படும்?
    ॐ விரதங்கள்

11. “சுக்கிர வாரம்” எனக் குறிப்பிடப்படுவது எது?
    ॐ வெள்ளிக்கிழமை

12. “சுக்கிரவாரம்” எத்தெய்வங்களை நோக்கி அனுஸ்டிக்கப்படுகின்றது?
    ॐ முருகன், அம்பாள், பிள்ளையார்

13. வெள்ளிக்கிழமை விரதம் எவ்வாறு நோற்க வேண்டும்?
    ॐ வெள்ளிக்கிழமை விரதநாளில் வீடுகளில் தூய்மையைப் பேணுவதோடு சைவ உணவு முறைகளையும் கடைப்பிடிக்க வேண்டும். இத்தினத்தில் ஆலயத்திற்குச் சென்று இறைவழிபாட்டில் ஈடுபடுதல் சாலச் சறந்தது. இவ் விரதநாளில் முழு நாளும் உபவாசம் இருத்தல் சிறந்தது. இதற்கு இயலாதோர் ஒரு வேளை உணவு உட்கொண்டு விரதத்தை இறைபக்தியுடன் அனுட்டிப்பது அவசியமாகும் (ஐப்பசி மாதத்தில் வருகின்ற வெள்ளிக் கிழமை விரதம் சிறப்பானது)

14. மகாமகம் என்பது எத்தனை வருடங்களுக்கு ஒரு முறை வரும்?
    ॐ 12 வருடங்கள்

ஆ. பண்டிகைகள்

1. தைப் பொங்கல் எப்போது கொண்டாடப்படுகின்றது?
    ॐ உத்தராயணத்தின் தொடக்க நாளான தை முதல் நாள் தைப்பொங்கல் கொண்டாடப்படுகின்றது.

2. தைப்பொங்கல் வேறு எப்பெயர்களால் அழைக்கப்படுகின்றது?
    ॐ மகர சங்கிராந்தி
    ॐ தைத் திருநாள்
    ॐ உழவர் திருநாள்
    ॐ அறுவடைத் திருநாள்

3. தைப் பொங்கலையொட்டி நடைபெறும் பண்டிகைகள் யாவை?
    ॐ போகிப் பண்டிகை – தைப்பொங்கலுக்கு முதல் நாள்
    ॐ மாட்டுப் பொங்கல் - தைப்பொங்கலுக்கு மறுநாள் (பட்டிப்பொங்கல்)

4. பண்டிகைகளைக் கொண்டாடுவதனால் ஏற்படும் நன்மைகள் இரண்டு தருக
    ॐ பகிர்ந்துண்ணல்
    ॐ அன்பு
    ॐ அறம்
    ॐ புனிதம் பேணல்
    ॐ நன்றி மறவாமை

5. சூரியன் தனு ராசியிலிருந்து மகர ராசியில் பிரவேசிக்கும் காலம் எவ்வாறு அழைக்கப்படும்?
    ॐ மகர சங்கிராந்தி

6. நாம் கொண்டாடும் பண்டிகைகள் எவை?
    ॐ தைப்பொங்கல்
    ॐ சித்திரை புதுவருடப்பிறப்பு
    ॐ தீபாவளி

7. பண்டிகைகள் எவற்றை வளர்க்க உதவுகின்றன?
    ॐ இறையுணர்வினை வளர்க்கவும், மனிதனது சிந்தனை, செயல் என்பவற்றைத் தூய்மை செய்யவும் உதவுகின்றன.

## 07. திருமுறை வைப்பு

1. திருமுறை என்பதன் பொருள் யாது?

   ௐ திரு + முறை எனப்பிரித்து ''திரு'' என்பது அழகு, தெய்வீகம், மங்கலம், மேன்மை, செல்வம் எனவும் 'முறை'' என்பது ஒழுங்கு, வரிசை, ஒழுக்கம், உறவு, தரம், நூல் எனவும் பொருள் தரும். அதாவது தெய்வீக உணர்வு பெருக, சமய ஒழுக்கத்தைப பேணும் நோக்கத்துடன் தொகுக்கப்பட்ட உயர்வான நூல்களின் தொகுதியே திருமுறைகளாகும்

2. பத்தாம் திருமுறை யாது? அதன் ஆசிரியர் யார்?

   ௐ திருமந்திரம்
   ௐ திருமூலர்

3. பெரியபுராணம் எத்தனையாம் திருமுறையாக உள்ளது? அதன் மறு பெயர்கள் எவை?

   ௐ 12ம் திருமுறை
   ௐ திருத்தொண்டர் புராணம்
   ௐ சேக்கிழார் புராணம்

4. திருமுறைகளைப் பாடுவதனுடாக நாம் அடையும் பயன்கள் எவை?

   ௐ ஓதுவார் உள்ளங்களைத் தூய்மையாக்க வல்லவை
   ௐ நோய் தீர்ப்பவை
   ௐ நல்வினைகளைப் பெருக்குபவை
   ௐ இறைவன் மீது பக்தியை ஏற்படுத்துபவை
   ௐ ''அன்பே சிவம்'' எனும் தத்துவ சிவநெறியில் ஒழுக வைப்பவை
   ௐ நினைத்தவர்களுக்கு நிலையான பயனைத் தருபவை
   ௐ ஞானத்தை வழங்கி முக்திக்கு இட்டுச் செல்லும்

5. திருமுறைகளை வேறு எவ்வாறு அழைப்பர்?

   ௐ தமிழ்வேதம்
   ௐ தமிழ்மறை

6. திருமுறைகளைத் தொகுத்தவர், தொகுப்பித்தவர் யாவர்?

   ௐ தொகுத்தவர் - நம்பியாண்டார்நம்பி
   ௐ தொகுப்பித்தவர் - இராஜராஜ சோழன்

7. இராஜராஜ சோழனின் மறுபெயர்கள் எவை?

   ௐ சிவபாத சேகரன்
   ௐ திருமுறை கண்ட சோழன்

8. அடங்கன் முறை என்றால் என்ன?

   ௐ முதல் ஏழு திருமுறைகளும் அடங்கன் முறை எனப்படும்.

9. தேவார முதலிகள் எனப்படுவோர் யாவர்?

   ௐ திருஞானசம்பந்தர்
   ௐ திருநாவுக்கரசர்
   ௐ சுந்தரர்

10. திருமந்திரத்தின் மறுபெயர்கள் எவை?

    ௐ தமிழ் மூவாயிரம்
    ௐ திருமந்திர மாலை
    ௐ தமிழாகமம்
    ௐ சுந்தரனாகமம்

11. பெரிய புராணம் எவற்றை பிரதிபலிக்கின்றது?
- ௐ சிவனடியார்களின் பெருமை
- ௐ பக்திச் சிறப்பு

12. திருமுறைத் தொகுப்பினுள் இடம் பெறும் ஒரேயொரு பெண்ணடியார் யார்?
- ௐ காரைக்காலம்மையார்

12 திருமுறைகளின் தொகுப்பு

<table>
<tr><th>எண்</th><th>திருமுறையின் பெயர்</th><th>திருமுறை ஆசிரியர்</th><th>ஆசிரியர்<br>தொகை</th></tr>
<tr><td>1,2,3</td><td>தேவாரம்</td><td>திருஞானசம்பந்தர்</td><td>1</td></tr>
<tr><td>4,5,6</td><td>தேவாரம்</td><td>திருநாவுக்கரசர்</td><td>1</td></tr>
<tr><td>7</td><td>தேவாரம்</td><td>சுந்தரர்</td><td>1</td></tr>
<tr><td>8</td><td>திருவாசகம்<br>திருக்கோவையார்</td><td>மாணிக்கவாசகர்</td><td>1</td></tr>
<tr><td rowspan="2">9</td><td>திருவிசைப்பா</td><td>திருமாளிகைத்தேவர்,<br>சேந்தனார்,கருவூர்த் தேவர்,<br>நம்பிகாடநம்பி,<br>கண்டராதித்தர்,வேணாட்டடிகள்,<br>திருவாலியமுதனார்,<br>புருடோத்தநம்பி, சேதிராயர்</td><td rowspan="2">9</td></tr>
<tr><td>திருப்பல்லாண்டு</td><td>சேந்தனர்</td></tr>
<tr><td>10</td><td>திருமந்திரம்</td><td>திருமூலர்</td><td>1</td></tr>
<tr><td>11</td><td>40 பிரபந்தம்<br>(பிரபந்த மாலை)</td><td>திருவாலவாயுடையார்,<br>காரைக்காலம்மையார்,<br>ஐயடிகள் காடவர்கோன்,<br>சேரமான் பெருமாள்,<br>நக்கீர தேவர்,கல்லாட தேவர்,<br>கபில தேவர்,பரண தேவர்,<br>இளம்பெருமானடிகள்,<br>அதிராவடிகள்,பட்டினத்து அடிகள்,<br>நம்பியாண்டார் நம்பி.</td><td>12</td></tr>
<tr><td rowspan="2">12</td><td rowspan="2">பெரியபுராணம்</td><td rowspan="2">சேக்கிழார்</td><td>1</td></tr>
<tr><td>27பேர்</td></tr>
</table>

## 08. காரைக்கால் அம்மையார்

1. காரைக்கால் அம்மையாரின் இளமைப்பெயர் யாது?
   ௐ புனிதவதியார்

2. காரைக்கால் அம்மையார் எனப் பெயர் வரக் காரணம் யாது?
   ௐ புனிதவதியார் காரைக்கால் எனும் ஊரில் பிறந்தமையால் "காரைக்கால் அம்மையார்" எனப்பட்டார்

3. காரைக்கால் அம்மையாரிடம் காணப்பட்ட சிறந்த நற்பண்புகள் மூன்றினை எழுதுக
   ௐ சிறுவயதிலிருந்து சிவ பக்தியுடையவர்
   ௐ சிவனடியார்களுக்கு உணவளித்தல்
   ௐ உண்மை பேசுதல்

4. காரைக்கால் அம்மையார் பாடிய பிரபந்தங்கள் யாவை?
   ௐ திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்
   ௐ திருவிரட்டை மணிமாலை
   ௐ அற்புதத் திருவந்தாதி

5. காரைக்கால் அம்மையாரின் பக்திச் சிறப்புப் பற்றிக் குறிப்பிடுக?
   ௐ பரமதத்தனான கணவரிடம் விருப்பத்திற்கேற்ப இறைவனிடம் (சிவபெருமானிடம்) இருந்து மாங்கனியைப் பெற்றுக் கொண்டமை.

6. சிவனால் "அம்மையே" என அழைக்கப் பேறு பெற்றவர் யார்?
   ௐ காரைக்கால் அம்மையார்

7. காரைக்கால் அம்மையாரின் தந்தையின் பெயர் என்ன?
   ௐ தனதத்தன்

8. இறைவனிடம் என்புருவோடு (பேய் உரு) கூடிய உருவத்தைப் பெற்றவர் யார்?
   ௐ காரைக்கால் அம்மையார்

# 09. திருமுறைகள்

1. திருஞான சம்பந்தர் தேவாரம்

   1. திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரால் பாடப்பெற்ற ஈழத்துச் சிவாலயங்கள் எவை? எங்கிருந்த வண்ணம் அத்தேவாரங்களைப் பாடியருளினார்?
      - ௐ திருக்கேதீச்சரம், திருக்கோணேஸ்வரம்
      - ௐ இராமேஸ்வரத்திலிருந்து

   2. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரின் அற்புதங்களால் கவரப்பட்டு சைவத்திற்கு மாறிய மன்னன் யார்?
      - ௐ கூன் பாண்டியன்

   3. “நிரைகழ லரவம்”, “விருது குன்றமா” எனும் தேவாரங்களின் பண்களைக் குறிப்பிடுக
      - ௐ ‘‘நிரைகழ லரவம்’’ – புறநீர்மை
      - ௐ ‘‘விருது குன்றமா’’ – நட்டராகம்

   4. “நிரைகழலரவம்...” எனும் தேவாரத்தில் குறிப்பிடப்படும் சிவபெருமானின் சிறப்புக்கள் எவை?
      - ௐ வீரக் கழலின் ஒலியோடு சிலம்பொலியும் கலந்து ஒலிக்கும் திருவடிகளையுடைய குற்றமில்லாத குணத்தினர். திருமேனியையும், உமாதேவியாரை இடப்பாகத்தில் கொண்ட தோற்றத்தை உடையவர். அழகிய இடபத்தின் உருவம் தீட்டப்பட்ட வெற்றிக் கொடியை உடையவர்.

   5. “விருது குன்றமா..” எனும் தேவாரத்தில் குறிப்பிடப்படும் புராணக் கதையைக் குறிப்பிடுக.
      - ௐ திரிபுரத்து (முப்புரங்களைக்) கொண்ட அசுரர்களின் கோட்டைகளை சிவபெருமான் மேருமலையை வில்லாகவும் ஆதிசேடனை நாணாகவும் கொண்டு கடும் நெருப்பை அம்பின் முனையாகவும் கொண்டு போர் புரிந்து (இடத்துக்கிடம் பறந்து செல்லக் கூடிய) முப்புரங்களையும் நீறாக்கும்படி அழித்தார்.

   6. திருமுறைகள் என்றால் என்ன?
      - ௐ தெய்வத்தன்மை பொருந்திய அருட்பாக்கள் ஆகும்

   7. திருமுறைகள் ஓதப்படும் இடங்கள் எவை?
      - ௐ ஆலயங்கள்
      - ௐ வீடுகள்
      - ௐ கல்விச்சாலைகள்

2. திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்

   1. திருநாவுக்கரசு நாயனார் எத்தலத்தில் இருந்து திருக்கைலாயக் காட்சியை கண்டு தரிசித்தார்?
      - ௐ திருவையாறு

   2. “போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவாரவர்பின் புகுவேன்” எனும் தேவார அடிகளின் கருத்து யாது?
      - ௐ பூக்களுடன் நீருங் கொண்டு சாத்தித் திருமுழுக்காட்டி, பாடல்களால் துதித்து ஏற்றி வணங்கச் செல்லுகின்றவர்களாகிய தொண்டர்களின்பின் செல்லுகின்ற யான் (நான்)

   3. “மாதர்ப் பிறைக்கண்ணி யானை”, “ நங்கடம்பனைப் பெற்றவள்” எனும் தேவாரங்களின் பண் யாது?
      - ௐ ‘‘மாதர்ப் பிறைக்கண்ணி யானை’’ – காந்தாரம்
      - ௐ ‘‘நங்கடம்பனைப் பெற்றவள்’’ - காந்தாரம்

   4. திருநாவுக்கரசு நாயனார் கடைப்பிடித்த மார்க்கம் எது?
      - ௐ தாச மார்க்கம்

5. ‘நங்கடம்பனைப் பெற்றவள்” எனும் தேவாரத்தின் கருத்து யாது?
   - ॐ கடம்ப மாலையை அணிபவராகிய முருகக் கடவுள், உமாதேவியாரைப் பாகத்தில் உடையவர், திருக்கடம்பூர் என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் ஆவார். அவர் கடமை அடியவனாகிய என்னையும் பாதுகாத்தருளலாகும். அப் பெருமானுக்கு நாள் தோறும் தொண்டு புரிந்து வழிபடுதல் என் கடமையாகும்.

6. மேலைக் கடம்பூரில் உள்ள திருக்கோயில் எவ்வாறு அமைக்கப்பட்டது?
   - ॐ தேர் வடிவமாக சக்கரங்களோடு அமைக்கப்பட்டது.

## 3. சுந்தரமுர்த்தி நாயனார் தேவாரம்

1. சுந்தரமுர்த்தி நாயனரால் பாடப்பெற்ற இலங்கைச் சிவாலயம் எது?
   - ॐ திருக்கேதீச்சரம்

2. “நத்தார் படை ஞானன் பசு” எனுந் தேவாரத்தில் குறிப்பிடப்படும் சிவபெருமானின் சிறப்புக்கள் யாவை?
   - ॐ சங்கினைப் படையாக ஏந்திய ஞானியாக விஷ்ணுவை இடப வாகனமாகக் கொண்டு ஏறியவரும், கவிழ்ந்து தொங்குகின்ற வாயையும், மதமும் கொண்ட யானையின் தோலைப் போர்த்த நித்திய கல்யாணரும், இறந்தவர்களின் எலும்பை அணிந்தவரும் ஆவார்.

3. திருக்கேதீச்சரத்தின் தீர்த்தம் யாது?
   - ॐ பாலாவி

4. “பொன்னார் மேனியனே” எனும் தேவாரம் எத்தலத்தின் மீது பாடப்பெற்றது?
   - ॐ திரு மழபாடித் திருத்தலம்

5. “பொன்னார் மேனியனே” எனும் தேவாரத்தில் குறிப்பிடப்படும் சிவபெருமானின் சிறப்புக்கள் யாவை?
   - ॐ பொன் போன்ற திருமேனியை உடையவர். புலித்தோலை அரையில் தரித்து விளங்குகின்ற சிவந்த சடையில் கொன்றை மாலையை அணிந்தவர். ஒப்புயர்வற்ற பரம்பொருள். திருமழபாடியெனுந் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள மாணிக்க இரத்தினம் போன்றவர். தாய்க்கு ஒப்பானவர்

6. “நத்தார் படை” , “பொன்னார் மேனியனே” எனும் தேவாரங்களின் பண்களைக் குறிப்பிடுக
   - ॐ ‘‘நத்தார் படை’’ – நட்டபாடை
   - ॐ ‘‘பொன்னார் மேனியனே’’ - நட்டராகம்

## 4. மாணிக்கவாசகர் சுவாமிகள் -திருவாசகம்

1. திருவாசகத்தைப் பாடியவர் யார்?
   - ॐ மாணிக்கவாசகர்

2. “பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும் புழுத்தலைப் புலையனேன்”எனும் பாடலடியில் குறிப்பிடப்படுவர் யார்?
   - ॐ மாணிக்கவாசகர்

3. “அம்மையே அப்பா ஒப்பிலா மணியே” எனும் பாடலில் குறிப்பிடப்படும் சிவபெருமானின் சிறப்புக்கள் யாவை?
   - ॐ தாயைப் போன்றவர்
   - ॐ தந்தையைப் போன்றவர்
   - ॐ உவமை இல்லாத மாணிக்கம் போன்றவர்
   - ॐ அன்பாகிய கடலில் உண்டான அரிய அமுதம் போன்றவர்

4. “சித்தமலம் அறுவித்துச் சிவம் ஆக்கி எனை ஆண்ட அத்தன்”எனக் குறிப்பிடப்படுபவர் யார்?
   ॐ சிவபெருமான்

5. அச்சோப்பதிகம் என்பதற்கான காரணம் யாது?
   ॐ இறைவன் எமக்குச் செய்த கருணையை அச்சோ என்று வியத்து பாடிய பதிகமாதலால், இது அச்சோப்பதிகம் எனப்பட்டது.

6. திருவாசகத்தில் காணப்படும் பாடல் வகைகள் எவை?
   ॐ திருச்சதகம்
   ॐ திருச்சாழல்
   ॐ திருவம்மானை
   ॐ திருவெம்பாவை
   ॐ பிடித்தபத்து

5. திருவாலியமுதனார் - திருவிசைப்பா (9ம் திருமுறை)

1. திருவிசைப்பா என்பதன் பொருள் யாது?
   ॐ திருவிசைப்பா என்பது இறைவனின் பெருமைகளைப் பாடுகின்ற தெய்வத்தன்மை பொருந்திய இசைப்பாடல் எனப் பொருள்படும்.

2. திருவிசைப்பா பாடல்களை எத்தனை பேர் பாடியருளியுள்ளனர்?
   ॐ 9 பேர்

3. இறைவன் எங்கு திருநடனம் புரிவதாக இப்பாடல் குறிப்பிடுகின்றது?
   ॐ தில்லையில்

4. “புலித்தோல் பியற்கிட்டு” எனக் குறிப்பிடப்படும் கடவுளர் யார்?
   ॐ சிவபெருமான்

5. “மின்னின் இடையாள்” எனச் சிறப்பிக்கப்படுபவர் யார்?
   ॐ உமாதேவியார்

6. சேந்தனர் - திருப்பல்லாண்டு (9ம் திருமுறை)

1. சேந்தனார் திருப்பல்லாண்டு பாடி தேரினை ஓடச் செய்த தலம் எது?
   ॐ தில்லைச் சிதம்பரம்

2. பல்லாண்டு என்பதன் பொருள் யாது?
   ॐ பல்லாண்டு என்பது பல வருடங்கள் வாழ்க என வாழ்த்தும் கவி ஆகும்

3. “திருவாரூரின் மழவிடை யார்க்கு”எனக் குறிப்பிடப்படுபவர் யார்?
   ॐ சிவபெருமான்

4. “குழலொலி யாழொலி” எனும் திருப்பல்லாண்டின் பண் யாது?
   ॐ பஞ்சமம்

5. திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்னும் இருவகைப் பாடல்களையும் பாடியவர் யார்?
   ॐ சேந்தனார்

7. சேக்கிழார் - பெரியபுராணம் (12ம் திருமுறை)

1. பெரியபுராணத்தை அருளியவர் யார்?
   ॐ சேக்கிழார்

2. எவருடைய வரலாற்றினைக் கொண்டதாகப் பெரியபுராணம் காணப்படுகின்றது?
   ॐ 63 அடியார்களின் வரலாற்றினை

3. பெரியபுராணம் பாட அடியெடுத்துக் கொடுத்தவர் யார்?
   - ௐ இறைவன் (சிவபெருமான்)

4. "புனிதவாய் மலர்ந்தழுத" எனும் பாடலடியில் குறிப்பிடப்படுபவர் யார்?
   - ௐ திருஞானசம்பந்தர்

5. "வேதநெறி தழைத்தோங்க" எனும் பாடலில் யாருடைய சிறப்புக் கூறப்படுகின்றது? அவற்றுள் இரண்டினைத் தருக?
   - ௐ திருஞான சம்பந்தர்
   - ௐ வைதிக ஒழுக்கம் தழைக்கச் செய்தார்
   - ௐ மேலான சைவநெறி மேம்பட்டு வளரச் செய்தல்.

8. திருப்புகழ் - தோத்திரப் பாடல்

1. நாம் எவற்றைத் தோத்திரப் பாடல்கள் எனக் குறிப்பிடுகின்றோம்?
   - ௐ சைவத்திருமுறைகள் தொகுக்கப்பட்ட காலத்தின் பின்னர் எழுந்த அருட்பாடல்கள் ஆகும்.

2. திருப்புகழில் "இறவாமல் பிறவாமல்" எனும் பாடல் எத்தலத்தின் மீது பாடப்பட்டது?
   - ௐ கதிர்காமம்

3. "குறமாதைப் புணர்வோனே" எனும் பாடலடியில் குறமாது எனக் குறிப்பிடப்படுபவர் யார்?
   - ௐ குறவர் குலப் பெண்ணான வள்ளி

4. "இறவாமல் பிறவாமல்" எனும் பாடலில் குறிப்பிடப்படும் கடவுள் யார்? அவர் பற்றி பாடலில் குறிப்பிடப்படும் சிறப்புக்களைக் கூறுக?
   - ௐ முருகன்
   - ௐ இறத்தல், பிறத்தல் இரண்டையும் தவிர்ப்பவன்
   - ௐ நிலையான வீடு பேறைத் தருபவர்.

# 10. ஆலய வழிபாடு

1. ஆலயம், கோயில் என்பவற்றின் பொருள் யாது?
   - ௐ ஆலயம் - ஆலயம் என்பதை ஆ+லயம் எனப் பிரிக்கும் போது ''ஆ'' என்பது ஆன்மாவையும், ''லயம்'' என்பது லயப்படுதல் அல்லது ஒடுங்குதல் என்பதையும் குறிப்பதால், ஆலயம் என்பது ஆன்மாக்கள் ஒடுங்குவதற்குரிய இடமாகக் கொள்ளப்படும்.
   - ௐ கோயில் - ''கோயில்'' என்பது கோ+யில் எனப் பிரிக்கும் போது ''கோ'' என்பது இறைவனையும், ''இல்'' என்பது உறையும் இடத்தையும் குறிக்கும் எனவே, கோயில் என்பது இறைவன் உறையும் இடம் எனப் பொருள்படும்

2. நீங்கள் ஆலயத்திற்குக் கொண்டு செல்லக்கூடிய பூசைப் பொருள்களைக் குறிப்பிடுக.
   - ௐ வெற்றிலை, பாக்கு, கற்பூரம், ஊதுபத்தி, கோட்டுப்பூ, கொடிப்பூ, நிலப்பூ ஆகிய பூக்கள். பால், தயிர் இளநீர் ஆகிய அபிஷேகப் பொட்கள்.

3. ஆலய வழிபாட்டின் பொழுது மேற்கொள்ளப்படும் நமஸ்காரங்கள் யாவை?
   - ௐ அட்டாங்க நமஸ்காரம்
   - ௐ பஞ்சாங்க நமஸ்காரம்
   - ௐ திரியாங்க நமஸ்காரம்

4. ஆலயத்தில் செய்யக்கூடிய சரியை, கிரிகைத் தொண்டுகளைப் பட்டியற்படுத்துக.
   - ௐ சரியைத் தொண்டுகள் - ஆலயத்தைக் கூட்டுதல், கழுவுதல், பூசை உபகரணங்கள் விளக்குதல், பூந்தோட்டம் அமைத்தல், பூமாலை கட்டிக் கொடுத்தல், சுகந்த தூபமிடுதல், மணியடித்தல், திருவிழாக் காலங்களில் வாகனம் காவுதல், குடை, கொடி, ஆலவட்டம் என்பவற்றைப் பிடித்தல், சாமரை வீசுதல், தீவர்த்தி பிடித்தல், பிரார்த்தனை செய்தல்

   - ௐ கிரியைத் தொண்டுகள் - திருமுறைகளைப் பாடுதல், மந்திரங்களை உச்சரித்தல்

5. ஆலய வழிபாட்டின் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் பயன்கள் யாவை?
   - ௐ மன நிறைவைத் தருகின்றது.
   - ௐ அன்பை வளர்க்கின்றது
   - ௐ வாழ்வை மேம்படுத்துகின்றது
   - ௐ ஆன்மா இறைவனை அடைய வழிவகுக்கின்றது

6. "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" எனக் கூறியவர்?
   - ௐ ஔவையார்

7. "இந்தச்சரீரம் நமக்குக் கிடைத்தது கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்" எனக் கூறியவர்?
   - ௐ ஆறுமுக நாவலர்

✞ கீழே தரப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு வெற்றிடங்களை நிரப்புக.

| |
|---|
| சண்டேசுவரர், திரியாங்க, ஆன்ம ஈடேற்றம், கோபுரத்தை |

1. வெளிவீதி வலம் வரும்போது இரு பாலாரும் திரியாங்க நமஸ்காரம் செய்தல்.
2. ஆலயத்தினை அண்மித்ததும் தூலலிங்கமாகிய கோபுரத்தை முதலில் வணங்க வேண்டும்.
3. சண்டேசுவரர் சந்நிதியை அடைந்து வணங்கி, துதித்து மும்முறை கைதட்டி சிவதரிசன பலனைத் தரும்படி வேண்டுதல் செய்ய வேண்டும்.
4. மனிதம் ஆன்ம ஈடேற்றம் அடைய ஆலய வழிபாடு மிகவும் அவசியமானது.

# 11. சமய குரவர்கள்

அ. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

1. திருஞான சம்பந்தர் உமையம்மையிடம் ஞானப் பாலுண்ட திருத்தலம் எது?
   - ॐ சீர்காழித் திருத்தலம்

2. திருஞானசம்பந்தர் தாய், தந்தையர் யாவர்?
   - ॐ தாய் - பகவதி அம்மையார்
   - ॐ தந்தை – சிவபாத விருதயர்

3. பொற்றாளம் கிடைக்கப் பெற்ற திருத்தலம் எது?
   - ॐ திருக்கோலாக்கா

4. சம்பந்தர் நிகழ்த்திய அற்புதங்கள் மூன்றினைக் குறிப்பிடுக
   - ॐ கொடிமாடச் செங்குன்றூரில் பனியினால் வருந்திய அடியார்களின் துன்பத்தைப் போக்கியமை
   - ॐ தந்தை யாகம் செய்வதற்காக ஆயிரம் பொன் கொண்ட ஒரு (உலவாக்கிழி) பொன் முடிச்சைப் பெற்றுக் கொண்டமை.
   - ॐ திருமருகலில் கன்னியுடன் வழிப்பயணம் சென்ற வணிகன், பாம்பு தீண்டி இறந்தான் இவ்வணிகனைப்பதிகம் பாடி உயிர்ப்பித்தமை.

5. சம்பந்தர் பாடப்பெற்ற ஈழத்துச் சிவாலயங்கள் எவை?
   - ॐ திருக்கேதீஸ்வரம்
   - ॐ திருக்கோணேஸ்வரம்

6. திருஞானசம்பந்தர் குருபூசைத் தினம் எது?
   - ॐ வைகாசி மூலம்

7. சம்பந்தரின் மறுபெயர்கள் எவை?
   - ॐ பாலறாவாயர்
   - ॐ ஆளுடைய பிள்ளை
   - ॐ கவுணியர் கோன்
   - ॐ தென்புகலி வேந்தர்
   - ॐ பரசமய கோளரி
   - ॐ காளி வேந்தர்

ஆ. திருநாவுக்கரசு நாயனார்

1. நாவுக்கரசரின் தாய், தந்தையர் யாவர்?
   - ॐ தாய் - மாதினியார்
   - ॐ தந்தை – தரும சேனர்

2. நாவுக்கரசர் சைவத்திலிருந்து எந்த மதத்திற்குச் சென்றார்?
   - ॐ சமண சமயத்திற்கு

3. நாவுக்கரசர் பாடிய முதல் தேவாரம் எது?
   - ॐ ''கூற்றாயின வாறு''

4. நாவுக்கரசருக்கு சமணர்கள் செய்த கொடுமைகள் எவை?
   - ॐ நீற்றறையில் இட்டமை
   - ॐ மதங்கொண்ட யானையை ஏவியமை
   - ॐ கல்லோடு கட்டிக் கடலில் போட்டமை

5. நாவுக்கரசர் செய்த அற்புதங்கள் நான்கினை எழுதுக.
   - ॐ திருமுறைக் காட்டிலுள்ள கதவினைத் திறந்தமை
   - ॐ திருவீழிமிழலையில் தேவாரம் பாடி படிக்காசு பெற்று பஞ்சம் தீர்த்தமை
   - ॐ அப்பூதியடிகளின் மகன் பாம்பு தீண்டி இறந்த பின்பு பதிகம் பாடி உயிர்ப்பித்தமை
   - ॐ திருப்பழையாறிலே வடதளி என்னும் ஆலயத்திலுள்ள சிவலிங்கத்தை சமணர்கள் மறைந்து வைத்த போது அதனை வெளிக் கொணர்ந்தமை.

### இ. சுந்தரமூர்த்தி நாயனார்

1. சுந்தரரை வளர்த்த மன்னன் யார்?
   - ॐ நரசிங்க முனையர்

2. யாருடைய மகளை சுந்தரருக்கு மணம் பேசினர்?
   - ॐ புத்தூர் சடங்கவி சிவாச்சாரியாரின் மகளை

3. சுந்தரரின் திருமணத்தை சிவபெருமான் எவ்வடிவமேற்று தடுத்தருளினார்?
   - ॐ கிழப்பிராமண வடிவில்

4. சிவனடியார்களைப் போற்றி சுந்தரர் பாடிய நூல் எது?
   - ॐ திருத்தொண்டத் தொகை

5. சுந்தரமூர்த்தி நாயனாரின் சமயப் பணிகள் மூன்றினைக் குறிப்பிடுக.
   - ॐ சிவனடியார்களைப் போற்றும் முகமாக திருத்தொண்டத் தொகை பாடியமை
   - ॐ திருவாரூரில் பங்குனி உத்திரத் திருவிழாச் செலவிற்காகப் பரவையாருக்கு பொன்னைப் பெற்றுக் கொண்டமை.
   - ॐ முதலையுண்ட பிள்ளையை மீட்டமை.

6. சுந்தரரின் மறுபெயர்கள் எவை?
   - ॐ வன்றொண்டர்
   - ॐ ஆலால சுந்தரர்
   - ॐ தம்பிரான் தோழர்

7. சுந்தரரின் தாய், தந்தையர் யாவர்?
   - ॐ தாய் - இசைஞானியார்
   - ॐ தந்தை – சடையனார்

8. சுந்தரரின் குருபூசைத் தினம் எது?
   - ॐ ஆடிச் சுவாதி

9. சுந்தரர் பாடிய முதல் தேவாரம் எது?
   - ॐ "பித்தா பிறை சூடி"

10. சுந்தரர் நின்ற நெறி எது?
   - ॐ யோக நெறி

### ஈ.மாணிக்கவாசகர் சுவாமி

1. திருவாசகம் யாரால் அருளப்பட்டது?
   - ॐ மாணிக்கவாசகரால்

2. திருவாசகம் எத்தனை பாடல்களைக் கொண்டது?
   - ॐ 655 பாடல்கள்

3. மாணிக்கவாசகர் நின்ற நெறி யாது?
   - ௐ ஞான நெறி

4. மாணிக்கவாசகர் வரலாற்றினைக் கூறும் நூல்கள் எவை?
   - ௐ திருவிளையாடற் புராணம்
   - ௐ திருவாதவூரடிகள் புராணம்
   - ௐ திருவுத்தர கோசமங்கைப் புராணம்

5. மாணிக்கவாசகர் நிகழ்த்திய சமய அற்புதங்களைக் குறிப்பிடுக.
   - ௐ புத்த பிக்குவை வாதில் வென்றமை.
   - ௐ இவரது திருவாசகத்தை இறைவனே ஏடும் எழுத்தாணியும் கொண்டு எழுதியமை.

6. மாணிக்கவாசகரின் குருபூசைத் தினம் எது?
   - ௐ ஆனிமகம்

7. மாணிக்கவாசகர் தாய், தந்தையர் யாவர்?
   - ௐ தாய் - சிவஞானவதியார்
   - ௐ தந்தை – சம்புபாதாசிரியர்

8. மாணிக்கவாசகர் நின்ற நெறி யாது?
   - ௐ ஞான நெறி

9. மாணிக்கவாசகரின் மறு பெயர்கள் யாவை?
   - ௐ தென்னவன் பிரமராயன்
   - ௐ மணிவாசகர்
   - ௐ திருவாதவூரர்
   - ௐ ஆளுடைய அடிகள்
   - ௐ மணிமொழியார்
   - ௐ கோவை வேந்தர்

## 12. சேர். பொன் இராமநாதன்

1. சேர். போன் இராமநாதன் எப்போது பிறந்தார்?
   - ௐ 1851.04.16

2. இராமநாதன் எப்போது சேர் பட்டம் பெற்றார்?
   - ௐ 1921

3. இராமநாதனின் சமயப்பணிகளை அட்டவணைப்படுத்துக.
   - ௐ பரமேஸ்வராக் கல்லூரியில் பரமேஸ்வரன் கோயிலைக் கட்டுவித்தார்.
   - ௐ அமெரிக்கா, ஐரோப்பா, அவுஸ்திரேலியா முதலான நாடுகளுக்குச் சென்று தமது ஆன்மீகப் போதனையால் சைவசமயத்தைப் பரவச் செய்தார்.
   - ௐ கொழும்பு கொச்சிக்கடையில் சைவத்தின் பெருமையினை உணர்த்தும் கலைக் கூடமாக பொன்னம்பலவாணேச்சரத்தை கற்றிளியாகக் கட்டிய பெருமை சேர். பொன். இராமநாதனையே சாரும்
   - ௐ 1923 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் சைவ வித்தியா விருத்திச் சங்கம் தோன்றுவதற்குக் காரணமாக இருந்தார்.
   - ௐ பிறசமயங்களை மதித்தார். சேர். பொன். இராமநாதன் அவர்கள் கல்வி, சட்டத்துறை சார்ந்த நூல்களை எழுதியுள்ளார், (உ-ம்) திருக்குறட்பாயிரம், இராமநாத பாஷ்யம், ஒளவை நாயகியின் ஆத்திசூடி, திருமந்திர உரை விளக்கம், பகவத்கீதா தமிழ்மொழி பெயர்ப்பும் விருத்தியுரையும்

4. சேர். போன். இராமநாதன் எப்போது இறைபதம் அடைந்தார்?
   - ௐ 1930.11.26

(இவர் ஆண்களுக்கு பரமேஸ்வராக் கல்லூரியையும், பெண்களுக்கு உடுவில் மருதனார் மடத்தில் மகளிர் கல்லூரியையும் நிறுவியமை குறிப்பிடத்தக்கது.)

# 13. கடவுள்

1. அறிவிக்காமல் அறியும் பொருள் எது?
   - ௐ பதி

2. கடவுளின் இரண்டு நிலைகளும் எவை?
   - ௐ சொரூபலக்கணம்
   - ௐ தடத்தலக்கணம்

3. இறைவனின் மூவகைத் திருமேனிகளும் எவை?
   - ௐ அருவம், உருவம், அருவுருவம்

4. இறைவனுக்கு எத்தனை குணங்கள் கூறப்படுகின்றன? அவை எவை?
   8 குணங்கள்
   - ௐ தன்வயத்தனாதல்
   - ௐ தூயவுடம்பினனாதல்
   - ௐ இயற்கையுணர்வினனாதல்
   - ௐ இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்குதல்
   - ௐ பேரளுடைமை
   - ௐ வரம்பிலின்ப முடைமை
   - ௐ வரம்பில்லாற்றலுடைமை
   - ௐ முற்றுமுணர்தல்

5. முத்திநிலையில் ஆன்மாவின் நிலை எவ்வாறு இருக்கும்?
   - ௐ முத்திநிலையில் கடவுளுடன் ஆன்மாக்கள் இணைந்து காணப்படும்

6. திரிகரணங்களும் எவை?
   - ௐ மனம், வாக்கு, காயம்

7. முப்பொருள்களும் அவற்றின் தன்மையையும் கூறுக.
   - ௐ பதி – அறிவிக்காமலே அறியும் பொருள்.
   - ௐ பசு – அறிவித்தால் மட்டும் அறியும் பொருள்.
   - ௐ பாசம் - அறிவித்தாலும் அறியமாட்டாத பொருள்.

8. இம் முப்பொருள்களும் எப்படிப்பட்டது?
   - ௐ என்றும் உள்ளவை, அழிவில்லாதவை, அநாதியானவை

9. ஐந்தொழில்களும் அவற்றினை ஆற்றும் இறைவனின் பெயல்களையும் கூறுக.
   - ௐ படைத்தல் - பிரம்மா
   - ௐ காத்தல் - விஷ்ணு
   - ௐ அழித்தல்- உருத்திரன்
   - ௐ மறைத்தல் - மகேஸ்வரன்
   - ௐ அருளல் - சதாசிவம்

# 14. நாட்டார் (கிராமிய) வழிபாடு

1. ஆகமம் சாராத வழிபாடு என்றால் என்ன?
   ॐ ஆகம நெறிக்குட்படாத கிராமிய மக்களின் வாழ்க்கையில் மிகவும் முக்கியத்துவம் பெறும் வழிபாடு ஆகமம் சாராத வழிபாடாகும்.

2. நாட்டார் தெய்வ வழிபாடு சிறப்புப் பெறுவதற்கான காரணம் யாது?
   ॐ கிராமிய மக்களின் வாழ்க்கையில் முக்கியத்துவம் பெறுவதோடு பொது மக்கள் பூசகரின் உதவியின்றி தாமே நேரடியாக வழிபாடு செய்யக் கூடியதாக இருத்தல்.

3. நாட்டார் தெய்வங்களை வகைப்படுத்திக் காட்டுக.
   ॐ ஆண் தெய்வம்
   ॐ பெண் தெய்வம்
   ॐ கற்தெய்வம்

4. நாட்டார் வழிபாட்டின் மூலம் நீர் பெற்றுக்கொண்ட பயன்கள் எவை?
   ॐ கிராமிய கலைகளை விருத்தி செய்யக் கூடியதாய் இருத்தல்.
   ॐ கிராமிய விளையாட்டுக்களை அறியக் கூடியதாய் இருத்தல்.
   ॐ சமூகத்தினரிடையே நல்லுறவைப் பேணக் கூடியதாக இருத்தல்.

5. முனியப்பர் வழிபாடு சிறப்பாக நடைபெறும் பிரதேசங்களைக் குறிப்பிடுக.
   ॐ யாழ்ப்பாணம் -கோட்டை முனியப்பர் ஆலயம், வல்லைவெளி முனியப்பர் ஆலயம்.
   ॐ மலையகம்

6. காளியம்மன் வழிபாட்டின் போது மேற்கொள்ளும் சடங்கு முறையினைக் குறிப்பிடுக.
   ॐ நேர்த்தி வைத்தல்
   ॐ பொங்கல்படைத்தல்

7. நாட்டார் தெய்வங்களை வழிபடுவதனால் ஏற்படும் சமூக நன்மைகள் இரண்டினைத் தருக.
   ॐ சமூக ஒற்றுமை, சமூக நீதி, சமூக ஒழுங்கு

8. கிராமிய ஆண், பெண் தெய்வங்களைப் பட்டியற்படுத்துக.

| | |
|---|---|
| ॐ ஆண் தெய்வங்கள் | பெண் தெய்வங்கள் |
| ॐ ஐயனார் | கண்ணகி |
| ॐ வைரவர் | காளி |
| ॐ வீரபத்திரர் | மாரி |
| ॐ பெரிய தம்பிரான் | திரௌபதி |
| ॐ முனியப்பர் | நாச்சிமார் |
| ॐ காத்தவராயன் | கொத்தி |
| ॐ மதுரை வீரன் | பிடாரி |
| ॐ மாடன் | |
| ॐ கருப்பு சாமி | |

9. நாட்டார் தெய்வ வழிபாட்டில் இடம் பெறும் தெய்வங்களை வேறு எவ்வாறு அழைப்பர்?
   ॐ ஊர்த்தெய்வங்கள், கிராமிய தேவதைகள், காவல் தெய்வங்கள், எல்லைத் தெய்வங்கள்

✣ பொருத்தமான சொற்களைக் கொண்டு இடைவெளிகளை நிரப்புக. ( கரிய, கிராமியவழிபாடு, கிராமிய, பூசாரி)

1. ஆகம நெறிக்குட்படாத வழிபாடு கிராமிய வழிபாடு என அழைக்கப்படும்.
2. சிறுதெய்வ வழிபாடு கிராமிய கலைகளை வளர்ப்பதில் முக்கிய பங்காற்றுகிறது.
3. காளி கரிய நிறத்தையுடையவள் என்பது பொருள்.
4. நாட்டார் தெய்வ வழிபாட்டில் ஆண்டில் ஆண்டுப் பொங்கலை பூசாரி மேற்கொள்வார்.

## 15. இலங்கையில் சைவ சமய வளர்ச்சி

1. இலங்கையைச் சிவபூமி எனச் சிறப்பித்துக் கூறியவர் யார்?
   ॐ திருமூலர்

2. (அ) இலங்கையில் பாடல் பெற்ற தலங்கள் எவை?
   ॐ திருக்கேதீஸ்வரம்
   ॐ திருக்கோணேஸ்வரம்

   (ஆ) இத்தலங்களைப் பாடிய நாயன்மார்கள் யாவர்?

   ॐ திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர்

3. திருகோணமலையிலுள்ள கன்னியா தீர்த்தத்தை அமைத்தவர் யார்?
   ॐ இராவணன்

4. இலங்கையில் காணப்பட்ட புராண ஈஸ்வரங்கள் ஐந்தும் எவை?
   ॐ திருக்கோணேஸ்வரம்
   ॐ திருக்கேதீஸ்வரம்
   ॐ முன்னேஸ்வரம்
   ॐ நகுலேஸ்வரம்
   ॐ சந்திரசேகர ஈஸ்வரம்

5. யாழ்ப்பாணத்தில் ஆரியச் சக்கரவர்த்திகளின் முத்திரைக் காசுகளில் பொறிக்கப்பட்டிருப்பவை எவை?
   ॐ ‘‘சேது’’ என்ற எழுத்துடன் சிவபெருமானின் வாகனமாகிய ‘‘நந்தியும்’’இருந்தது.

6. இலங்கையில் சைவத்தின் தொன்மையைப் பற்றி ஆராய்ந்த வரலாற்றாசிரியர்கள் இருவரைக் குறிப்பிடுக.
   ॐ திரு. J.W.ரெனற்
   ॐ சேர். வில்லியம் ஜோன்ஸ்

# 16. இலங்கையிலுள்ள சைவ ஆலயங்கள்

அ. நகுலேச்சரம்

1. நகுலேஸ்வரம் எங்கு அமைந்துள்ளது?
   ॐ யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ்ப்பாண நகரிலிருந்து வடமேற்குத் திசையில் ஏறாத்தாழ 20மஅ தொலையில் உள்ளது.

2. நகுலேஸ்வரத்தில் வீற்றிருக்கும் இறைவனின் பெயர் யாது?
   ॐ நகுலேசுவரர்

3. நகுலேச்சரம் எனப் பெயர் வரக் காரணம் யாது?
   ॐ கீரி என்பதைக் குறிக்கும் வடசொல் நகுலம் என்பதாகும். வேடன் ஒருவன் முனிவரின் சாபத்திற்கு ஆளாகி கீரி முகமானான். அவன் முனிவரிடம் சாப விமோசனம் தருமாறு வேண்டினான். முனிவர் இரக்கம் கொண்டார்.இலங்கைச் சென்று கீரிமலைத் தீர்த்தத்தில் நீராடி நோய் தீர்க்குமாறு அருளினார். கர்மயோகப் பயிற்சியும் வழங்கினார். அவன் கீரிமலைத் தீர்த்தத்தில் நீராடி கீரிமுகம் நீங்கப் பெற்றான். கீரிமுகம் நீங்கிய இடம் கீரிமலை என்றும் நகுலகிரி என்றும் வழங்கப்பட்டு நகுலேச்சரம் என்று அழைக்கப்பட்டது.

4. நகுலேச்சரம் பற்றிக் கூறும் நூல்கள் எவை?
   ॐ யாழ்ப்பாண வைபவமாலை
   ॐ ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சரித்திரம்
   ॐ நகுலேச புராணம்
   ॐ நகுலேஸ்வர மான்மியம்
   ॐ நகுலமலைக் குறவஞ்சி
   ॐ நகுலேஸ்வர பூங்கொத்து
   ॐ நகுலேஸ்வரர் சாதகம்
   ॐ நகுலேஸ்வரர் ஊஞ்சல்

5. நகுலேஸ்வர ஆலயத்தின் தலவிருட்சம் எது?
   ॐ வில்வமரம்

   ⬭ இறைவி – நகுலாம்பிகை

ஆ. தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயம்

1. தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத்தின் அமைவிடத்தைத் தருக.
   ॐ யாழ்ப்பாணத்தில் காங்கேசன் துறைக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் தெல்லிப்பளை என்னும் கிராமத்தில்

2. இவ்வாலயத்தில் ஆரம்பத்தில் எதனை வைத்து வழிபாடு ஆற்றினார்கள்?
   ॐ ஸ்ரீ சக்கரம்

3. இவ்வாலயத்தின் தீர்த்தம் எது?
   ॐ துர்க்கா புஸ்கரணி

4. இவ்வாலயத்தின் விருட்சம் எது?
   ॐ இலுப்பை மரம்

5. இவ்வாலயத்தில் எத்தனை நாட்களுக்கு மகோற்சவம் இடம்பெறும்?
   ॐ 12 நாட்கள்

இ. மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்

1. விநாயகர் ஆலயங்களுள் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம் சிறப்புப் பெறக் காரணம் யாது?
   - ௐ இவ்வாலயம் யாழ்ப்பாணத்தை ஆண்ட ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்திற்கு முற்பட்ட மிகப் பழமையான ஆலயமாகும்.

2. மானிப்பாய் விநாயகர் ஆலயத்தில் எப்போது திருவிழா இடம்பெறும்?
   - ௐ சித்திரைத் திங்கள்

3. இவ்வாலயத்தின் தலவிருட்சம் எது?
   - ௐ மருதமரம்

4. இவ்வாலயத்தில் எழுந்தருளியிருக்கும் விநாயகரை எவ்வாறு அழைப்பர்?
   - ௐ வீரகத்தி விநாயகர்

ஈ. கொத்துக்குளம் முத்துமாரியம்மன் கோயில்

1. கொத்துக்குளம் அம்மன் ஆலயத்தின் அமைவிடத்தைத் தருக.
   - ௐ புளியந்தீவின் வடமேற்கிலே மட்டக்களப்பு நகர் எல்லையில் கொத்துக்குளம் எனும் இடத்தில் அமைந்துள்ளது.

2. கொத்துக்குளம் அம்மன் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் பராசக்தியை வேறு எப்பெயர்களால் அழைக்கின்றனர்?
   - ௐ மாரியம்மன்
   - ௐ மகா மாரியம்மன்
   - ௐ முத்து மாரியம்மன்

3. கொத்துக்குளம் அம்மன் ஆலயத்தில் தெய்வமாடும் வழக்கம் எப்போது கைவிடப்பட்டது?
   - ௐ 1951 ஆம் ஆண்டு

4. கொத்துக்குளம் அம்மன் ஆலயத்தில் உயிர்ப்பலியிடும் வழக்கம் எப்போது கைவிடப்பட்டது?
   - ௐ 1948 ஆம் ஆண்டு

5. இவ்வாலயத்தில் உயிர்ப்பலிக்குப் பதிலாக புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட விடயம் யாது?
   - ௐ உயிர்ப்பலிக்குப் பதிலாக அம்மனைப் பூசிப்போர் தத்தம் வீடுகளில் ஆண்டுக்கொருமுறை செய்வது போன்று சர்க்கரை அமுது கொடுத்துச் செய்யும் பெரும் படையற்பூசை வழக்கம் கொண்டுவரப்பட்டது.

6. இவ்வாலயத்தில் மார்கழித் திருவாதிரை கொண்டாடப்படும் முறையைக் குறிப்பிடுக.
   - ௐ மார்கழித் திருவாதிரைத் தினத்தன்று காலை வேளை அம்மனைக் கோவிலில் வீதிவலமாக கொணர்ந்து, உள்தீதியின் வடமேற்கு மூலையிலுள்ள தீர்த்தக் கிணற்றடிக்கு வந்ததும், திரைச்சீலையால் மறைப்புக்கட்டி அம்மனுக்கு திருமுழுக்காட்டுகின்ற வழக்கமொன்று
     இத்தலத்தில் நடைமுறையிலிருக்கின்றதது. அன்றைய தினம் மஞ்சள் விளையாட்டு நடாத்துவதும், அன்றைய விஷேட பிரசாதமாக பிட்டு, களி என்பன செய்து அம்மனுக்குப் படைத்தலும் இடம் பெறும்.

உ. சித்தாண்டி முருகன் ஆலயம்

1. சித்தாண்டி முருகன் ஆலயம் எங்கு அமைந்துள்ளது?
   - ௐ மட்டக்களப்பு மாவட்டத்தில் வடபால் ஏறாத்தாழ 22km தொலைவில் சித்தாண்டி எனும் கிராமத்தில்

2. சித்தாண்டி முருகன் என்ற பெயர் எற்படக் காரணம் யாது?
   - ௐ பல நூற்றாண்டுகளுக்கு முன் சிகண்டி என்னும் முனிவர் பெருமான் இங்கு வந்து, தம்மிடத்திலிருந்த இரும்பு வேலாயுதத்தை வழிபட்டார் எனவும், அம்முனிவர் பெருமான் பல அற்புதச் சித்துக்களைச் செய்தமையால் சித்தர் எனவும், நீறுபூத்த மேனியுடனும், உருத்திராக்க கோலத்துடன் விளங்கியமையால் ஆண்டி என்றபெயரும் கொண்டு அழைக்கப்பட்டார்.இவ்விரு பெயரும் சேர்த்து (சித்து+ஆண்டி)சித்தாண்டி என காரண இடுகுறிப் பெயராக அமைந்தது.

3. சித்தாண்டி முருகன் ஆலய மகோற்சவம் நடைபெறும் காலம் யாது?
   - ௐ ஆவணி மாதம் பிரதமையில் கொடியேற்றத்துடன் தொடர்ந்து 15 நாட்கள் இடம்பெறும்

4. சித்தாண்டி முருகன் ஆலயத்தில் நடைபெறும் கலை நிகழ்ச்சிகள் மூன்று தருக?
   - ௐ வசந்தன் கூத்து
   - ௐ காவடி ஆட்டம்
   - ௐ கரகம்
   - ௐ கொம்பு விளையாட்டு

5. சித்தாண்டி தலபுராணம் யாரால் இயற்றப்பட்டது?
   - ௐ ஆரப்பற்றை அழகேசமுதலி

6. இவ்வாலயப் பூசை எவ்வாறு இடம்பெறும்?
   - ௐ தெய்வானையம்மன் கோயிலில் மட்டும் திரை திறக்கப்படாது பூசை நடைபெறும் மூலஸ்தானமும், மற்றைய பரிவார கோயில்களும், வள்ளியம்மன் கோயிலும் திரை திறக்கப்பட்டு பூசை இடம்பெறும்.

ஊ. பேராதனை குறிஞ்சிக் குமரன் ஆலயம்

1. குறிஞ்சிக்குமரன் ஆலயத்தின் அமைவிடத்தை எழுதுக.
   - ௐ எழில் கொஞ்சும் மத்திய மலை நாட்டின் தலைநகரான கண்டியிலுருந்து 4மைல் தொலைவில் பேராதனைப் பல்கலைக்கழகத்தை அடுத்துள்ள மலைப்பாங்கான இடத்தில் அமைந்துள்ளது.

2. குறிஞ்சிக்குமரன் ஆலயத்தின் தீர்த்தம் யாது?
   - ௐ மகாவலி கங்கையின் கிளையாறு

3. குறிஞ்சிக்குமரன் ஆலயத்தை நிர்வாகிப்போர் யாவர்?
   - ௐ பேராதனைப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள்
   - ௐ விரிவுரையாளர்கள்
   - ௐ பல்கலைக்கழக இந்து மாணவர்கள்
   - ௐ பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறிய பட்டதாரி மாணவர்கள்

4. குறிஞ்சிக்குமரன் ஆலயத்தில் அனுட்டிக்கும் விரதங்கள் இரண்டினைக் கூறுக?
   - ௐ நவராத்திரி
   - ௐ சித்திராபௌர்ணமி
   - ௐ கந்தசஷ்டி
   - ௐ திருவெம்பாவை
   - ௐ தைப்பூசம்
   - ௐ திருக்கார்த்திகை

5. இவ்வாலயத்தில் காணப்படும் பரிவாரத் தெய்வங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.
   - ௐ விநாயகர், சிவன், நடேசர், விஸ்ணு, வைரவர், நவக்கிரகங்கள்

6. குறிஞ்சிக்குமரன் ஆலயத்தில் பிரதிட்டை செய்யப்பட்ட திருவுருவங்கள் எங்கிருந்து ஊர்வலமாக எடுத்து வரப்பட்டன?
   - ௐ யாழ்ப்பாணத்திலுள்ள மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்திலிருந்து

# 17. இலங்கையிலுள்ள சமயங்கள்

1. இலங்கையில் உள்ள பிரதான சமயங்கள் எவை?
   ௐ சைவம், பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்தவம்

2. இந்துக்கள் கொண்டாடும் பண்டிகைகள் இரண்டு தருக.
   ௐ தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு, தீபாவளி

3. பௌத்தர்களின் புனித நூல்கள் எவை?
   ௐ திரிபிடகம், தம்மபதம்

4. இஸ்லாமியப் பண்டிகைகள் எவை?
   ௐ நோன்புப்பெருநாள், ஹஜ்ஜுப் பெருநாள்

5. கிறிஸ்தவ மதத்தின் வழிபாட்டுக்குரியவர் யார்?
   ௐ இயேசு கிறிஸ்து